Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.295 /2019 Date:02.07.2026
Deposition of witness for prosecution: PW 3 வானதி
Defence:
Court:

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 02.07.2026 TIME **PM**

1–வது எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**MP 19/26 மனுவின் பெயரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

எனது ஊர் வருசநாடு வாலிபாறை என்றால் சரிதான். 1–வது எதிரிக்கும், எனக்கும் விருப்பத்தின் அடிப்படையில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எனது கணவருடன் சந்தோசமாக வாழ்ந்து வந்தேன் என்றால் சரிதான். எனது கணவர் மீது நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். எனது கொழுந்தனாரின் நிச்சியதார்த்ததிற்கு நானும் எனது கணவரும் சந்தோசமாக சென்றோம் என்றால் சரிதான். எனது திருமணத்திற்கு பின்னர் எனது கொழுந்தனார் VAO தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று பணி பெற்றார் என்றால் சரிதான். திருமணத்தின் போது எனக்கு அணிவித்த நகைகளை எனது மாமனார், மாமியார் கனரா வங்கியில் அடகு வைத்தார்கள் யார் பெயரில் வைத்தார் என்று எனக்கு தெரியாது. எனது அப்பா தான் வருசநாடு கனரா வங்கியில் அடகு வைத்தார் என்றால் சரியல்ல. நான் மனநலம் பாதிக்கப்பட்டு ஒட்டன்சத்திரத்தில் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான், மருத்துவ சான்றுகள் நான் நார்மலாக இருப்பதாக உள்ளது. அதற்குரிய ஆவணங்களை போலிசாரிடம் ஒப்படைத்தேன். எனது கணவர் என்னை நல்லமுறையில் பராமரித்து வந்தார் என்றாலும் நான் தான் வாழாமல் பிரிந்து சென்று எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.
Sd/P. kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.